**இலங்கை மின்சார சபை – 2015**

---

இலங்கை மின்சார சபை (சீஈபீ) மற்றும் சபையினதும் (சீஈபீ) அதன் துணைக் கம்பனிகளினதும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள், காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுடிற்கான நிதிக்கூற்றுக்களும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1969 இன் 31 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 49(4) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் இலங்கை மின்சார சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட லங்கா கோல் (தனியார்) கம்பனி தவிர்ந்த துணைக் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் உரிய துணைக் கம்பனிகளின் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனங்களால் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான சபையின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எல்கேஏஎஸ்/எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (“சபை”) பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சீஈபீயின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சீஈபீயின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும்

கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை மின்சார சபை (சீஈபீ) மற்றும் சீஈபீயினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 தொகுதி நிதிக்கூற்றுக்கள்

வரையறுக்கப்பட்ட லங்கா கோல் தனியார் கம்பனியின் (எல்சீசீ) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் நேரடியாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் பின்வரும் விடயங்களை அடிப்படையாகக்கொண்டு முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(i) **எல்கேஏஎஸ் 19 - ஊழியர் நலன்களிலுள்ள** ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனியானது எதிர்கால கடப்பாடுகளை எதிர்கொள்வதற்காக அதன் ஓய்வூதிய நலன்களை முதலீடு செய்திருக்காததுடன் நிர்ணயிக்கப்பட்ட நலன்புரித் திட்டத்தை சரியான முறையில் கணக்கீடு செய்வதற்காக பின்பற்றப்பட வேண்டிய படிமுறைகள் கம்பனியால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) **எல்கேஏஎஸ் 39- நிதிக்கருவிகள் : இனங்காணல் மற்றும் அளவிடுதலிலுள்ள** ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனமானது அதனது ‘‘கடன் மற்றும் வருமதிகளை’’ ‘‘நிதிச் சொத்துக்களின்’’ கீழ் இனங்காணப்பட வேண்டியிருந்ததுடன் அதனைத் தொடர்ந்து விளைதிறன் வட்டி வீத முறையை பயன்படுத்தி காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட வேண்டும். எனினும், ரூபா 336,683,193 தொகையான அனல் நிலக்கரி நகர்விற்கான வியாபார கடன்பட்டோர் முற்பணம் மற்றும் ரூபா 47,624,500 தொகையான நீராவி நிலக்கரிக்கான வியாபார கடன்பட்டோர்கள் (சீஈபீ) போன்ற நிதிச்சொத்துக்கள் காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்டிருக்கவில்லை.

மேலும், நியமத்தால் வேண்டப்பட்டதன் பிரகாரம், சந்தை வட்டி வீதத்தை விட குறைவான வட்டி வீதத்தில் வழங்கப்பட்ட பதவியணிக் கடன்கள் விளைதிறன் வட்டி வீத முறையைப் பயன்படுத்தி காலக்கழிவிடப்பட்ட கிரயத்தில் இனங்காணப்பட வேண்டியிருந்ததுடன் சந்தை வட்டிவீதம் மற்றும் கடன்களிலிருந்து பெறப்பட்ட வட்டி வீதத்திற்கிடையிலான வித்தியாசம் பதவியணிக் கிரயமாக இனங்காணப்பட வேண்டும். எனினும், கம்பனியானது கடன்களின் மீதான பதவியணிக் கிரயத்தை இனங்கண்டிருக்கவில்லை.

(iii) கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீஈபீயிடமிருந்து பெறவேண்டிய தொகை ரூபா 380,343,765 ஆக இருந்தது. எனினும், சீஈபீயின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட இந்த மீதி ரூபா 734,086,996 ஆக இருந்தது. ஆகையால், இந்த இரண்டு நிதிக்கூற்றுக்களிற்கிடையே ரூபா 353,743,231 இணக்கஞ்செய்யப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

## 2.2.2 இலங்கை மின்சார சபையின் நிதிக்கூற்றுக்கள்

### 2.2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எல்கேஎஸ்/எஸ்எல்எவ்ஆர்எஸ்) மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளுடனான இணக்கம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீஈபீயானது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட ஊழியர், மூலப்பொருள் மற்றும் மேந்தலைக் கிரயத்தை பெறுமதியிடுவதற்காக உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்கு பதிலாக நியமக் கிரயங்களை பிரயோகிக்கின்றது. இதன் விளைவால், ரூபா 5,532,803,700 கூட்டுத்தொகையான தேறிய மூலப்பொருள் விலை முரண், ஊழியர் மற்றும் மேந்தலை விகித முரண்கள் பின்வரும் குறைபாடுகளுடன் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(i) இருப்புக்கள், நடைபெறும் வேலைகள் (டபிள்யூஐபி) மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை (பிபிஈ) பெறுமதியிடுவதற்காக நியமவிலைகளை பிரயோகித்தல் என்பன முறையே **எல்கேஎஸ் 2 - இருப்புக்கள் மற்றும் எல்கேஎஸ் 16 - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்** என்பவற்றுடன் இணங்கியிருக்கவில்லை.

(ii) மூலதன வேலைகளுடன் தொடர்புடைய உயர் நிதிசார் ஈடுபாட்டால் சீஈபீயின் செயற்பாட்டு விளைவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை என்பன குறிப்பிடத்தக்களவு பாதிக்கப்பட்டிருந்தது. எனினும், அதனால் நிதிக்கூற்றுக்களிலேற்படும் விளைவுகள் வேண்டப்பட்ட தகவல்கள் கிடைக்காமையினால் கணக்காய்வில் மதிப்பீடு செய்யப்பட முடியாதிருந்தது.

(ஆ) **எல்கேஎஸ் 39 - நிதிக்கருவிகள், இனங்காணல் மற்றும் அளவிடுதல்**: அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதியிலுள்ளவாறு நிறுவனமானது வெளிப்படுத்தியிருந்த நிதிக் கருவிகளிலிருந்து தோன்றுகின்ற இடரின் தன்மை மற்றும் அளவை மதிப்பீடு செய்வதற்குத் தேவையான தகவல்கள் நியமத்தால் வேண்டப்பட்டவாறு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

மேலும், பின்வரும் விடயங்கள் நியமத்தின் தேவைப்பாடுகளின் பிரகாரம், அதனுடைய நியாயப் பெறுமதிகளில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

- பதவியணிக் கடன்பட்டோர்கள்
- கூட்டுமுயற்சிகளிலுள்ள முதலீடு

### 2.2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013/2014 மதிப்பீட்டாண்டிற்கான ரூபா 3,939,497,475 தொகையான வருமான வரிக்கான ஏற்பாடு கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்காததால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த வரிப்பொறுப்பு அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2009 ஆம் ஆண்டில் முன்னாள் மின்வலு மற்றும் சக்தி அமைச்சின் பெயரின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ரூபா 46,884,422 பெறுமதியான ஆறு வாகனங்கள் சீஈபீயின் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக காட்டப்பட்டு அதற்கிணங்க பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. அதன் விளைவால், மீளாய்வாண்டிற்கான இலாபம் மற்றும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுத்திவைத்த இலாபம் என்பன முறையே ரூபா 6,697,772 மற்றும் ரூபா 31,631,338 ஆல் குறைவடைந்த அதேநேரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்றில் காட்டப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு என்பன முறையே ரூபா 46,884,422 மற்றும் ரூபா 31,631,338 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட ரூபா 7,267,690 கிரயமான பதினொரு வாகனங்கள் பல வருடங்களிற்கு முன்பிருந்தே காணாமல்போயிருந்தது. இருந்த போதிலும், அவை தற்போதும் சீஈபீயின் கணக்குப் புத்தகங்களில் சீராக்கங்களெதுவும் மேற்கொள்ளப்படாமலிருந்தன. இது தொடர்பில் அத்திகதியில் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது இனங்காணப்பட்ட ரூபா 33,526,482 பெறுமதியான எரிபொருள் இருப்புக் குறைவு கணக்குகளில் சீராக்கஞ்செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பில் 2017 ஏப்ரல் இறுதிவரை புலனாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2.3 இணக்கஞ்செய்யப்படாத வித்தியாசங்கள்

மீளாய்வாண்டிற்கான பட்டியல் முறைமை மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த மற்றும் சாதாரண கடன்பட்டோர்களின் மீதிகளுக்கிடையில் ரூபா 911,254,975 கூட்டுத்தொகையான இணக்கஞ்செய்யப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 14,069,944,922 வியாபார கடன்பட்டோர்களில் ரூபா 3,065,299,421 கூட்டுத்தொகையான சாதாரண மற்றும் மொத்த வழங்கல்கள் இரண்டுடனும் தொடர்புடைய கடன்பட்டோர்கள் ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாகவிருந்ததுடன் ரூபா 1,233,096,468 அறவிடாமல் ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவிருந்தது.

(ஆ) போதிய அறவீட்டு நடவடிக்கைகள் எடுக்காமல் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவுள்ள ஏனைய பெறவேண்டிய மீதிகள் ரூபா 2,294,287,211 ஆகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **கடன்பட்டோரின் பெயர்** | **தொகை** | **கொடுக்கல்வாங்கலின் தன்மை** |
|---|---|---|
| ---------------------------- | ---------- | ---------------------------------------- |
| | **(ரூபா.)** | |
| வரையறுக்கப்பட்ட வூட் குறுாப் காஸ் ரேர்வின் கம்பனி | 8,264,352 | மேற்கு கடற்கரை மின்வலுப் பொறிக்கான நுழைவு வீதியை கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு |
| மின்வலு மற்றும் சக்தி அமைச்சு | 6,142,276 | மேற்கு கடற்கரை மின்வலுப் பொறியின் திறப்பு விழாவிற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு |
| இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை | 897,025,999 | நுண் நீர்மின் அபிவிருத்தியாளர்களுக்குச் சீஈபீயால் செலுத்தப்பட்ட கட்டணச் சீராக்கங்கள் |
| வரையறுக்கப்பட்ட லின்ரல் (தனியார்) கம்பனி | 5,137,329 | வரையறுக்கப்பட்ட ஏசியா மின்வலு (தனியார்) கம்பனிக்காக பெறப்பட்ட காணிக்காக 1997 இலிருந்து செலுத்தப்பட்ட குத்தகை வாடகை. |
| வரையறுக்கப்பட்ட ஏசியா பவர் (தனியார்) கம்பனி | 1,000,000 | குத்தகைக்கு விடப்பட்ட காணிக்காக மேற்கொள்ளப்பட்ட வைப்புக்கள் |
| இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (எஸ்எல்ஆர்டிசீ) | 7,755,810 | குத்தகைக்கு விடப்பட்ட காணியின் சார்பில் எஸ்எல்ஆர்டிசீக்கு செலுத்தப்பட்ட ரூபா 10,631,560 மொத்த குத்தகை தொகையில் மீதி காலக்கழிவிடுவதற்காக இருந்தது. |
| -வரையறுக்கப்பட்ட ஏஈஎஸ் கெலனிதிஸ்ஸ (தனியார்) கம்பனி | 1,368,961,445 | விலை வித்தியாசங்களின் கொடுப்பனவு மீது அறவிடப்படவேண்டிய தொகை |
| | ------------------ | |
| **மொத்தம்** | **2,294,287,211** | |

(இ) வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார தனியார் கம்பனியிடமிருந்து (எல்ஈசீஓ) ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக பெறவேண்டிய ரூபா 46,548,248 தொகையை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டம்

(i) **47 (1) (ஆ) பிரிவு** – சீஈபீயினால் பெறப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவதற்காக பொதுத் திறைசேரியுடன் ஆழ்நிதியமொன்றை சீஈபீயானது ஸ்தாபித்து பேணலாம். ஒதுக்கமொன்று நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. ஆனால் அது 2000 ஆம் ஆண்டிலிருந்து நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வொதுக்கக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 17,708 மில்லியனாகும்.

(ii) **47 (2) (அ) பிரிவு** – சீஈபீயின் அசையும் மற்றும் அசையாத ஆதனங்களிற்கான பெறுமானத்தேய்வை மேவுகை செய்வதற்காக சீஈபீ பொதுத் திறைசேரியுடன் பெறுமானத்தேய்வு ஒதுக்கமொன்றை ஸ்தாபித்து பேணலாம். எனினும், அத்தேவைப்பாட்டிற்கு முரணாக 2000 திசெம்பர் 31 வரை வருடந்தோறும் ரூபா 1 மில்லியன் தொகையினை மாற்றீடு செய்து அதனது நிதிக்கூற்றுக்களில் பெறுமானத்தேய்வு ஒதுக்கமொன்றை ஏற்படுத்தியிருந்ததுடன் அதன் பின்னர் எவ்வித ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்திகதியில் திரண்டிருந்த ரூபா 23 மில்லியன் தொகை வருடாந்த நிதிக்கூற்றுக்களில் எவ்வித மீளாய்வுமின்றி தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(iii) **47 (2) (ஆ) பிரிவு** – சீஈபீயின் நிதி ஸ்திரத்தன்மையினை உறுதிசெய்து வருமான பணத்திலிருந்து அதன் மூலதன வேலைகளிற்கு நிதியளிக்கும் நோக்கத்திற்காகவும் சீஈபீ காலத்திற்குக் காலம் தீர்மானிக்கும் அவ்வாறான ஏனைய நோக்கத்திற்காகவும் சீஈபீ பொதுத் திறைசேரியுடன் பொது ஒதுக்கமொன்றை ஸ்தாபித்து பேணலாம். எவ்வாறாயினும், அத்தேவைப்பாட்டிற்கு முரணாக சீஈபீ அதனது நிதிக்கூற்றுக்களில் ஏனைய மூலதன ஒதுக்கமொன்றை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் இது 2000 ஆம் ஆண்டு முதல் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஒதுக்கக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 165.446 மில்லியனாகும்.

இது தொடர்பில் சபையின் தலைவர் பின்வருவனவற்றை வெளிப்படுத்தியிருந்தார்.

**போதிய திரவத்தன்மையுள்ள போது நிதியங்களை மாற்றுவதன் மூலம் இந்த ஒதுக்கங்களைப் பேணுவதற்கு இயக்குனர் சபை 2014 திசெம்பர் 15 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் தீர்மானித்திருந்தது.**

(ஆ) 1969 இன் 17 ஆம் இலக்க மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 46 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 11 (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் உள்ளவாறான மொத்த நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியின் 0.1 சதவீத பங்களிப்பின் அடிப்படையில் காப்புறுதி பாதுகாப்பு நிதியத்தில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,037 மில்லியன் தொகையான அதன் நிதிகளை சீஈபீ முதலீடு செய்திருந்தது.

(இ) 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.2 ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்து பொது முயற்சிகளும் அனைத்து முக்கிய செயற்பாடுகளையும் உள்ளடக்கிய தமக்கென உரித்தான முறைமைகள்/கையேடுகளை வைத்திருப்பதுடன் காலத்திற்கேற்ப திருத்தப்பட்டு நாளதுவைரயாக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், 1987 இல் தயாரிக்கப்பட்டிருந்த அதன் செயற்பாட்டு கையேடுகளை சீஈபீ மீளாய்வுசெய்து நாளதுவரையாக்கியிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட சீஈபீயினதும் தொகுதியினதும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சீஈபீயினதும் தொகுதியினதும் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டின் முறையே ரூபா 15,003 மில்லியன் மற்றும் ரூபா 8,779 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டததிற்கு எதிராக முறையே ரூபா 19,876 மில்லியன் மற்றும் ரூபா 24,411 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் முறையே ரூபா 34,879 மில்லியன் மற்றும் ரூபா 33,190 மில்லியன் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

மீளாய்வாண்டின் போது தேறிய நீர்மின் மற்றும் அனல்மின் உற்பத்தியை 35 சதவீதத்தால் அதிகரித்தமையால் வெப்ப மின் உற்பத்தியானது 47 சதவீதத்தால் குறைவடைந்தமை நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

எனினும், விநியோக பிராந்தியம் 2, 3 மற்றும் 4 என்பன 2014 இல் மேற்கொள்ளப்பட்ட சாதகமான பங்களிப்புக்கு எதிராக 2015 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த இலாபத்திற்கு எதிர்மறை பங்களிப்பை ஏற்படுத்தியிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பிரிவு | 2015<br>இலாபம் / (நட்டம்)<br>(ரூபா.) | 2014<br>இலாபம்<br>(ரூபா.) |
|---|---|---|
| டி-1 | 2,115,611,753 | 2,476,141,130 |
| டி-2 | (662,110,806) | 1,544,956,634 |
| டி-3 | (1,615,856,125) | 1,273,031,982 |
| டி-4 | (1,374,124,575) | 514,742,105 |
| **மொத்தம்** | **(1,536,479,753)** | **5,808,871,851** |

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

#### 3.2.1 நிதி நிலைமை

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மொத்தச் சொத்துக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 2 சதவீத எல்லையால் அதிகரித்திருந்த அதேநேரம், தேறிய நடைமுறைச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் ரூபா 6,990 மில்லியன்

எதிர்மறைப் பெறுமதிக்கெதிராக 2015 இல் ரூபா 12,861 மில்லியன் நேர்ப் பெறுமதியாக மாற்றமடைந்து 284 சதவீத அதிகரிப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. கடன் அறவீட்டுச் செய்முறை மற்றும் வேலை ஆரம்பிப்பு முற்பணங்களின் அறவீடு என்பவற்றில் முன்னேற்றம் இல்லாதிருந்தமை நடைமுறைச் சொத்துக்களின் குறைவிற்கான பிரதான காரணமாக இருந்தது.

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீஈபியால் ஈடுபடுத்திய மொத்த மூலதனத்தில் முற்பத்து நான்கு சதவீதம் அல்லது ரூபா 214 பில்லியன் கடன்களினூடாகப் பெறப்பட்ட நிதிகளால் நிதியிடப்பட்டிருந்த அதேவேளை முன்னைய ஆண்டின் 37 சதவீதத்தை இது பிரதிநிதித்துவப்படுத்தியது.

### 3.2.2 இலாபத்தன்மை

----------------------

நீர்மின் உற்பத்தி செய்கின்ற சூழ்நிலை இருந்த போதும், மின் கொள்வனவு உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் நிலையான கிரயம் ஏற்படல் தவிர்க்கமுடியாததொன்றாக இருந்ததுடன் இதன் விளைவால், பொது மக்களுக்கு குறைந்த கிரயத்தில் ஒரு அலகு மின்சாரத்தை வழங்கும் மிக முக்கிய நோக்கத்தை சீஈபீ அடைய முடியாதிருந்தது.

2014 ஆம் ஆண்டிற்கான ரூபா 19.31 ஆன சராசரி அலகுக் கிரயத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் இது ரூபா 14.28 ஆக இருந்ததுடன் ரூபா 16.01 இற்கு அலகொன்று விற்கப்பட்டது. (முன்னைய வருட சராசரி விற்பனை விலை ரூபா 18.31 ஆக இருந்தது.) அதற்கிணங்க, மீளாய்வாண்டின் அலகொன்றுக்கான மொத்த இலாபம் ரூபா 1.73 ஆக இருந்ததுடன் அலகொன்றுக்கான ரூபா 1.00 ஆன முன்னைய வருட சராசரி மொத்த நட்டத்துடன் ஒப்பிடும் போது இது 273 சதவீத அதிகரிப்பாகவிருந்தது. பின்வரும் அட்டவணையானது கட்டண வகைப்படுத்தலையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட மின்சாரத்தின் அலகொன்றிற்கான (கேடபிள்யூஎச்) பங்களிப்பையும் காட்டுகின்றது.

| **வகை** | **அலகொன்றிற்கான பங்களிப்பு (கேடபிள்யூஎச்)** | |
|---|---|---|
| | **2015** | **2014** |
| | **ரூபா.** | **ரூபா.** |
| உள்நாடு | (1.40) | (4.07) |
| மதத்தலங்கள் | (7.15) | (12.33) |
| பொது நோக்கம் | 9.65 | 8.58 |
| கைத்தொழில் | 0.49 | (2.73) |
| அரசாங்கம் | 4.04 | (0.57) |
| ஹோட்டல்கள் | 3.46 | 0.83 |
| வீதி விளக்குகள் | (14.28) | (19.31) |
| எல்ஈசீஓ இற்கான விற்பனைகள் | 1.14 | (0.84) |
| **அலகொன்றிற்கான சராசரிப் பங்களிப்பு** | **1.73** | **(1.00)** |

இதற்கமைய, பொது நோக்கத்தின் கட்டண வகைப்படுத்தல் மீளாய்வாண்டின் மொத்தப் பங்களிப்பிற்கு அதிகூடிய சாதகமான பங்களிப்பாளராகவிருந்ததுடன் கைத்தொழில், அரசாங்கம், ஹோட்டல்கள் மற்றும் எல்ஈசீஓ வகைப்படுத்தல்கள் மீதான கட்டணமும் சாதகமாக பங்களித்திருந்தது. உள்நாட்டு வகைப்படுத்தல் மீதான கட்டணம் மீளாய்வாண்டிற்கான மொத்தப் பங்களிப்புக்கு அதிகூடிய எதிர்மறைப் பங்களிப்பாளராக இருந்ததுடன் மதத்தலங்கள் மற்றும் வீதி விளக்குகள் வகைப்படுத்தல் மீதான கட்டணமும் அதற்கு சாதகமற்ற பங்களிப்புக்களை காட்டியிருந்தது.

## 3.3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.3.1 மின்வலு உற்பத்தி மற்றும் நேர்க்கிரயம்

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான மின்வலு உற்பத்தி மற்றும் மின்சார உற்பத்தி மற்றும் மின்வலுக் கொள்வனவுகளுக்காக ஏற்பட்ட நேர்க்கிரயங்களின் பொழிப்பினை பின்வரும் அட்டவணைகள் காட்டுகின்றன.

#### (i) மின்வலு உற்பத்தி

| மூலம் | மீளாய்வாண்டின் போதான தேறிய மின்வலு உற்பத்தி | | அதிகரிப்பு/ (குறைவு) | சதவீதம் |
|---|---|---|---|---|
| | 2015 | 2014 | | |
| | ஜிடபிள்யூஎச் | ஜிடபிள்யூஎச் | ஜிடபிள்யூஎச் | |
| நீர்மின் | 5,970 | 4,534 | 1,436 | 32 |
| அனல்மின் | 2,275 | 4,306 | (2,031) | (47) |
| நிலக்கரி | 4,443 | 3,202 | 1,241 | 39 |
| மாற்றமடையாத புதுப்பிக்கத்தக்க சக்தி | 402 | 315 | 87 | 28 |
| **மொத்தம்** | 13,090 | 12,357 | 733 | 6 |

மேற்குறிப்பிடப்பட்ட பகுப்பாய்வின் பிரகாரம், 733 ஜிடபிள்யூஎச் அதிகரிக்கப்பட்ட கேள்வி 2015 இல் சாதகமான மழை பெய்ததால் வெப்பமற்ற மூலங்களினூடாக விநியோகிக்கப்பட்டிருந்தது. வெப்ப மின் உற்பத்தி 2,031 ஜிடபிள்யூஎச் ஆல் குறைக்க முடிந்திருந்தால் விற்பனைக்கிரயம் ரூபா 37,418 மில்லியனால் குறைந்திருக்கும்.

**(ii) மின்வலு உற்பத்தி மற்றும் கொள்வனவுக்காக ஏற்பட்ட நேர்க்கிரயம்**

| **கிரய விடயம்** | **ஏற்பட்ட நேர்க்கிரயம் 2015** | | **2014** | |
|---|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **சதவீதம்** | **ரூபா மில்லியன்** | **சதவீதம்** |
| மின்வலு கொள்வனவு | 63,732 | 48 | 101,149 | 56 |
| மின்வலு உற்பத்தி | | | | |
| - நிலக்கரி | 20,991 | 16 | 17,031 | 9 |
| - எரிபொருள் | 23,114 | 18 | 46,582 | 26 |
| | **107,837** | **82** | **164,762** | **91** |
| ஏனைய செயற்பாட்டுக் கிரயம் | | | | |
| - செயற்பாடு மற்றும் பராமரிப்பு | 10,771 | 8 | 5,984 | 3 |
| - பெறுமானத்தேய்வு | 13,459 | 10 | 11,513 | 6 |
| **நேர்க்கிரயம்** | **132,067** | **100** | **182,259** | **100** |

இதற்கமைய, 2015 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்கான மொத்த செயற்பாட்டு கிரயத்தில் 82 சதவீதம் மற்றும் 91 சதவீதம் ஆனவை முறையே மின்வலு கொள்வனவு மற்றும் உற்பத்தியுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

### 3.3.2 லக் விஜயா மின்வலு நிலையத்தின் செயற்பாடுகள்(எல்விபிஎஸ்)

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலக்கரி இருப்பானது தன்னிச்சையான அளவைக் கம்பனியொன்றினால் பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்டிருந்ததுடன் அந்தக் கம்பனியால் வழங்கப்பட்ட அறிக்கையினை அடிப்படையாக்கொண்டு சரிபார்த்தல் குழுவானது ரூபா 760,280,883 பெறுமதியான 65,148 மெற்றிக்தொன் நிலக்கரி குறைவாக இருப்பதை இனங்கண்டிருந்தது. எனினும், இந்தப் பற்றாக்குறையானது நிலக்கரி கையாளுகையில் ஏற்பட்ட பின்வரும் பிரதான குறைபாடுகளின் சரியான தன்மை மீதான ஐயம் காரணமாக கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

- களஞ்சிய இடத்திலிருந்து பெறுகின்ற மற்றும் வழங்குகின்ற நிலக்கரியை அளவிடுவதற்கான முறைமை இல்லாமை
- பொறிக்கு உள்ளீடு செய்கின்ற நிலக்கரியை அளவிடுவதற்காக நம்பகத்தன்மையான முறைமை இல்லாமை
- எல்சீசீயோ அல்லது சீஈபீ யோ கப்பலிலிருந்து இறக்கப்படுவதை மேற்பார்வை செய்யாமை
- களஞ்சிய காப்பாளர் பொறியியலாளரால் கட்டுப்படுத்தப்பட்டவாறு இருப்பு கட்டுப்பாட்டினை விட பதியும் நடவடிக்கையையும் செய்தல்.

இதற்கமைய, நிலக்கரி கையாளுதல் மீதான பொருத்தமான கட்டுப்படுத்தப்பட்டவாறு ஸ்தாபிப்பதற்கும் பராமரிப்பதற்கும் எல்விபிஎஸ் பொறுப்பாகவுள்ளது என அவதானிக்கப்பட்டது.

## 3.4 முறையற்ற கொடுப்பனவுகள் / சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 திசெம்பர் 13 இல் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு முரணாக சீஈபீயானது 2009 இலிருந்து தாக்கம் செலுத்தப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்ட அடுத்த சம்பள மீளாய்விலிருந்து அதனது ஊழியர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரிப்பொறுப்பை ஊழியர்களிற்கு மாற்றுவதற்காக அதனது ஊழியர்களின் சார்பில் உழைக்கும் போதே செலுத்தும் வரியினை செலுத்தியிருந்தது. மேலும், சீஈபீயின் ஊழியர் ஊதியத்திற்காக கூட்டு உடன்படிக்கையினை கருத்திற்கொள்ளும் நேரத்தில் அமைச்சரவையால் 2015 மே 20 இல் அதே தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

அமைச்சரவையால் எடுக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தீர்மானத்தை மீறுவதன் மூலம் சீஈபீயால் 2010 இலிருந்து 2015 வரை அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த உழைக்கும் போதே செலுத்தும் வரி ரூபா 2,006,685,521 ஆக இருந்தது.

2001 மே 20 ஆந் திகதிய 1706/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தால் குறித்துரைக்கப்பட்ட காசற்ற நன்மைகளின் பெறுமதி ஒவ்வொரு ஊழியர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரியை கணிப்பிடும் போது கருத்திற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும், தனியார் பயன்பாட்டிற்கான விடுதிகள், குடியிருப்புக்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்ற ஏற்பாடுகளிற்கான காசற்ற நன்மைகளை சீஈபீ கருத்திற்கொள்ளவில்லை.

(ஆ) 2007 நவம்பர் 14 இன் 07/1955/332/045 ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானத்திற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது சீஈபீயின் உத்தியோகத்தர்களுக்கு காலத்திற்கு காலம் வேறுபட்ட உத்தியோகத்தர் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2014 இல் செலுத்தப்பட்ட ரூபா 849 மில்லியனான அத்தகைய படிகளுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,144 மில்லியன் தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது வெளிப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டின் இறுதியில் சீஈபீயின் தலைமை அலுவலகத்திற்காக ‘‘விதுலக்பாய’’ எனப் பெயர் சூட்டப்பட்டு பிரேரிக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் துளைத்தல் மற்றும் ஆலோசனை சேவைக்காக சீஈபீயால் ஏற்படுத்தப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 401 மில்லியனாகவிருந்தது. எனினும் நிர்மாண வேலைகள் 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் ‘‘விதுலக்பாய’’ செயற்திட்டத்தை கைவிடுவதன் மூலம் சீஈபீயின் தலைமை அலுவலக கட்டிடத்தை கொழும்பு 02 இலுள்ள சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில் நிர்மாணிப்பதற்கு பணிப்பாளர் சபை 2014 யூலை 09 இல் தீர்மானமொன்றை எடுத்திருந்தது. அத்திகதியில் முடிவுறுத்தப்பட்டிருக்காத கட்டிடத்தை வேறொரு நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கு அக் கூட்டத்தில் பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது.

(ஈ) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக சீஈபீயால் உரிய நேரத்தில் நிதிகளை பயன்படுத்தாமையால் வழங்கப்பட்ட கடன்களிலிருந்து கடப்பாட்டுக் கட்டணங்களாக ரூபா 77,306,029 தொகை கடன்வழங்கும் முவரால் கழிக்கப்பட்டிருந்தது.

(உ) சீஈபீ மற்றும் வரையறுக்கப்பட்ட லங்கா கோல் (தனியார்) கம்பனிக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், நிலக்கரி விநியோக வணிகத்தின் பங்காகவோ அல்லது பகுதியாகவோ வருடாந்த சுற்றுலாக்கிரயம் இருக்காததுடன்

அந்த நோக்கத்திற்காக இக் கம்பனியால் செலவிடப்பட்ட ரூபா 1,047,220 தொகை சீஈபீயால் மீளளிக்கப்பட்டிருந்தது.

## 3.5 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீஈபீ மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (சீபிசீ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட முறையே ரூபா 1,963,273,434 மற்றும் ரூபா 2,720,033,516 ஆன செலுத்த வேண்டிய மற்றும் பெறவேண்டிய மீதிகளுக்கிடையில் ரூபா 756,760,082 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பில் சீஈபீயின் தலைவர் பின்வருமாறு அறிக்கையிட்டிருந்தார்.

**2013 செப்தெம்பர் 30 இல் திறைசேரிச் செயலாளரால் நடாத்தப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் 2013 ஏப்ரல் 20 இலிருந்து செயற்படுகின்ற வகையில் தாமதமான சிட்டைப் பெறுமதியின் (கடன் காலத்திற்கு அப்பால்) மீதான வட்டியைச் செலுத்துவதற்கு தீர்மானித்திருந்தது. எனினும், ரூபா 753,610,829 தாமத வட்டிக் கொடுப்பனவு சீஈபீயால் 2013 ஏப்ரல் 20 இற்கு முன்னரான எரிபொருள் கொள்வனவுடன் தொடர்புபட்டிருந்தது. ஆகையால், இதற்கு சீஈபீ பொறுப்பில்லாததால் இந்த வித்தியாசத்தை இணக்கஞ்செய்வதற்கு வேண்டப்பட்டிருக்கவில்லை.**

(ஆ) கிராமிய மின்மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலான மின்சாரத்தை பிறப்பித்தல், பரிமாற்றம் செய்தல் மற்றும் விநியோகித்தல் நிகழ்ச்சித்திட்டங்களிற்காக சீஈபீயினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு உதவி மற்றும் மூலதன மானியம் என்பன பொதுத்திறைசேரியினால் மூலதன பங்களிப்பாக கருதப்படாதிருந்த போதிலும் அவை நீண்டகாலமாக பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனமாகக் கருதப்பட்டிருந்தன. 2015 ஆம் ஆண்டிற்கான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், சீஈபீக்கான மொத்த மூலதனப் பங்களிப்பு ரூபா 269 பில்லியன் ஆனதுடன் சீஈபீயின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 302 பில்லியன் ஆக இருந்தது. இதற்கமைய, இந்த இரண்டு நிதிக்கூற்றுக்களுக்கிடையில் ரூபா 33 பில்லியன் இணக்கஞ்செய்யப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பில் சீஈபீயின் தலைவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

**2015 பெப்ரவரி 13 இல் நடைபெற்ற கூட்டத்தில் பொதுத்திறைசேரி அவர்களுடைய பதிவேடுகளிற்கும் சீஈபீயின் பதிவேடுகளிற்கும் இடையில் ரூபா 33 பில்லியன் வித்தியாசத்தை பங்களிக்கப்பட்ட மூலதனமாக தொடருவதற்கு இணங்கியிருந்ததுடன் விலகல்கள் தொடர்பில் திறைசேரி கணக்குகள் அவர்களுடைய புத்தகங்களில் வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளும்.**

(இ) அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகள் உள்ளடங்கலாக அனைத்து பொதுத்துறை நிறுவனங்களில் நிதி மற்றும் நிர்வாகம் தொடர்பாக ஒரே சீரான நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகளைப் பேணுவதற்காக காலத்திற்குக்காலம் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட திறைசேரி சுற்றறிக்கைகள் மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கைகள் என்பவற்றை இலங்கை மின்சார சபையின் பணிப்பாளர் சபை இலங்கை மின்சார சபைக்கான நிர்வாக ஒழுங்குவிதிகளாக கடைப்பிடிப்பதற்கு அனுமதித்திராததால் அவை பிரயோகிக்கப்படுவதில்லை என்ற நிலையை 1969 இன் 31 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தால் திருத்தப்பட்ட 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சாரசபை அதிகாரச்சட்டத்திற்கு இணங்க சபை பேணியிருந்ததென்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. பின்வரும் சில சந்தர்ப்பங்கள் உதாரணங்களாக குறிப்பிடமுடியும்.

(i) 1998 மார்ச் 08 ஆந் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையான வட்டி வீதத்தில் பதவியணியினருக்கு வாகனக் கடன்களை வழங்குவதற்குப் பதிலாக சபை 4.2 சதவீத வட்டி வீதத்தில் கடன்களை வழங்கியிருந்தது. மேலும், சீஈபீ பல பண பிரச்சனைகளை சந்திக்கின்ற போதிலும் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி பதவியணியினர் கடன்கள் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) இந்த அறிக்கையின் 3.4 (அ) மற்றும் 3.4 (ஆ) பந்தியிலுள்ள அவதானிப்புக்களையும் தயவுசெய்து உசாத்துணை செய்க.

(ஈ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காப்புறுதி ஒதுக்க நிதிய மீதி மற்றும் காப்புறுதி ஒதுக்க நிதிய முதலீடு என்பவற்றுக்கிடையில் ரூபா 4,307 மில்லியன் தொகையான குறைவு சீஈபீயின் சுய காப்புறுதிக் கொள்கையின் பிரகாரம் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், அவ்வாறான நியதிச்சட்டத் தேவைப்பாடுகளை அமுலாக்குவதற்கு சீஈபீயில் முறையான நிதி முகாமைத்துவம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) எல்ஈசீஓ இற்கு பல ஆண்டுகளாக சீஈபீ மின்சாரத்தை விற்பனை செய்தும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளைக் கொள்வனவு செய்துமிருந்த போதிலும், தனிப்பட்ட நிறுவனங்களின் சுமூகமான செயற்பாடுகளை உறுதிப்படுவதற்கு அந்த இரு தரப்பினர்களுடன் விற்பனை மற்றும் கொள்வனவு உடன்படிக்கைகள் எதுவும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2016 திசெம்பர் 30 இல் சக்தி மீதான பாராளுமன்ற செயலக கண்காணிப்புக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட லக்விஜயா மின்வலுப் பொறிக்காக எல்சீசீயால் கொள்வனவு செய்யப்பட்ட நிலக்கரி மீதான எனது விசேட கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட முக்கிய விடயங்களிலிருந்தான சீஈபீக்கான விளைவுகள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு சுருக்கப்பட்டுள்ளன.

(i) நிலக்கரி கொள்வனவின் மூல கேள்வி கோரல் ஆவணங்களில் சில நிபந்தனைகளை உள்ளடக்குவதற்கு அனைத்துத் தரப்பினர்களின் உடன்படிக்கையினை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட வரைபு உடன்படிக்கை எல்சீசீ வழங்குநர்களுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட போது திருத்தப்பட்டிருந்தது. இதன் விளைவால் ரூபா 1,723,264,270 தாமதக்கட்டணங்களை அறவிடமுடியாதிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | தொகை ரூபா. | தொகை ரூபா. |
|---|---|---|
| அளவு உள்ளடக்கத்தின் வித்தியாசத்திற்கான தாமத விலைக் கட்டணம் | | |
| கால ஒப்பந்தம் | 1,138,147,270 | |
| நேரடிக் கேள்வியாளர் | 380,285,100 | 1,518,432,370 |
| | ----------------- | |
| கந்தகம் மற்றும் சாம்பல் உள்ளடக்கங்களின் விலகல்களுக்கான தாமத விலைக் கட்டணம் | | 204,831,900 |
| | | ----------------- |
| **மொத்தம்** | | **1,723,264,270** |
| | | =========== |

(ii) இலங்கை கப்பற்துறை கூட்டுத்தாபனத்திடமிருந்து (சீஎஸ்சீ) 141,046 மெற்றிக்தொன் நிலக்கரியை அத்தகைய கொள்வனவு நேரத்தில் ஏற்கனவேயுள்ள வழங்குநர்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைகளிலும் அதிகமான விலைகளில் கொள்வனவு செய்ததால் சீஈபீயால் ரூபா 68,141,580 மேலதிக செலவினம் ஏற்படுத்த வேண்டியிருந்தது. மேலும், இந்தக் கொள்வனவுகள் பின்வரும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்வனவு நடைமுறைகளை பின்பற்றாமலும் அமைச்சரவையின் அங்கீகாரமில்லாமலும் நிறைவேற்றப்படுத்தப்பட்டிருந்தது.

(iii) இதற்கு மேலதிகமாக, மேலே குறிப்பிடப்பட்ட பந்தியில் குறிப்பிட்டவாறு சீஎஸ்சீ ஆல் வழங்கப்பட்ட நிலக்கரியின் இழிவான தரத்தினால் ரூபா 852,768,000 நட்டத்தை சபை இனங்கண்டிருந்தது.

(iv) அனல்மின் நிலக்கரியை களஞ்சியப்படுத்த முன்னர் மின்வலு பொறியின் களஞ்சியத்தில் வைப்பதற்கு வேண்டப்பட்ட பச்சை இரும்பு மற்றும் அனல்மின் நிலக்கரியின் குறைவான வழங்கலானது முறையே 7,635 மெற்றிக்தொன்கள் மற்றும் 29,896 மெற்றிக்தொன்களாகவிருந்ததுடன் இவைகளின் பெறுமதி முறையே ரூபா 55,390,920 மற்றும் ரூபா 462,639,190 ஆகவிருந்தன. இந்தத் தொகைகள் முறையே 2009 மற்றும் 2012 இலிருந்து கணக்காய்வுத் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(v) சீஈபீயால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம், 2014 இலிருந்து 2015 வரையான காலப்பகுதியின் போது உரிய நேரத்தில் நிலக்கரி வழங்கப்படாததன் விளைவாக குறைவான செயல்விகிதத்தில் லக்விஜயா மின்வலுப் பொறி செயற்படுவதால் நிலைத்திருந்த நட்டம் ரூபா 983,230,000 ஆகவிருந்தது.

(vi) துறைமுகத்தில் நிலக்கரியை கையாளுதல் மீதான ரூபா 607 மில்லியன் தொகையான இறங்குதுறைக் கட்டணம் தனிப்பட்ட பொறுப்பின் அடிப்படையில் எல்சீசீ மற்றும் சீஎஸ்சீயுடன் பரிமாற்றஞ்செய்யப்படாமல் எல்சீசீக்கு மீளளிக்கப்பட்டிருந்தது.

## 3.6 விளைவற்ற சொத்துக்கள்

2009 இல் நிலக்கரியை பரிமாற்றும் நோக்கத்திற்காக ரூபா 1,129,256,732 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு அகன்ற படகுகள் மற்றும் மூன்று இழுவைப் படகுகள் நிலக்கரி இறக்கும் செயற்பாட்டிற்கு பொருத்தமற்றதாகவிருப்பதால் அத்திகதியில் விளைவற்றிருந்தது.

## 3.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் (எஸ்ஓஆர்) நீண்டகாலமாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கபட்ட நிரந்தரப் பதவியணியில் மூவாயிரத்து எண்ணூற்றி ஐம்பத்து ஆறு பதவிகள் வெற்றிடமாகவிருந்ததுடன் அவற்றில் பெரும்பாலோனர் ஒப்பந்த அடிப்படையிலும் வெளியிலிருந்து பெற்றும் நிரப்பப்பட்டிருந்தது.

| **வகுதிகள்** | **வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை** | **ஒப்பந்த அடிப்படையில்/ மனித வலுவால் நிரப்பப்பட்டவை** |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 311 | 0 |
| மத்திய மட்ட தொழில்நுட்பச் சேவை | 226 | 8 |
| எழுதுநர் மற்றும் இணைந்த வகுதிகள் | 510 | 1,058 |
| அலுவலக ஊழியர் வகுதிகள் | 63 | 287 |
| சாரதிகள் | 75 | 551 |
| திறன் தொழில்நுட்பச் சேவை<br>அரை- திறன் தொழில்நுட்பச் சேவை | 2,628 | 3,887 |
| ஏனைய திறன் பதவியணி | 43 | 6 |
| **மொத்தம்** | **3,856** | **5,797** |

(இ) தற்போதுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம், மொத்த மனித வள உத்தியோகத்தர் பதவியணியில் 50 சதவீதமானவை வெளியிலிருந்து நிரப்பப்படுவதுடன் அதனை ஒவ்வொரு ஆண்டிலும் படிப்படியாக அதிகரித்து 85 சதவீதம் வரை உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சீஈபீயின் வரலாற்றில் இரண்டு பொறியிலாளர்கள் பிரிவுகளின் தொழிற்பாடுகளிற்கு நீண்ட காலமாக தலைமைதாங்கி செயற்பட்டு வருவதனால் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் அவ்வாறு வெளிவாரியாக ஆட்சேர்ப்புச்செய்யப்பட்ட ஊழியர்களிற்கு தெளிவான பதிவியுயர்த்தல் பாதையொன்று இருப்பது அவதானிக்கப்படவில்லை.

(ஈ) பிரதிப் பொது முகாமையாளர் (ஆளணி) மனித வளப் பிரிவிலுள்ள பிரதான பதவியாக உள்ள போதிலும் விசேடமாக மின்னியல் பொறியியலாளர் போன்ற ஏனைய சேவையிலுள்ளோருக்கும் இப் பதவியினை பெற்றுக்கொள்வதற்கு இயலுமான முறையில் தேவையான தகைமைகள் மற்றும் அனுபவங்கள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மனித வள முகாமையாளர் (எச்ஆர்எம்) மற்றும் மனித வள உத்தியோகத்தர் போன்ற பதவிகளிற்கு நேரடி ஆட்சேர்ப்பிற்குத் தேவையான அனுபவம் 100 ஊழியர்களிற்கு மேற்பட்ட நிறுவனமொன்றில் மனிதவளத் துறையில் 06 ஆண்டுகளாக இருக்கின்றமை சீஈபீயில் கையாளப்பட வேண்டிய பதவியணிப் பலத்துடன் ஒப்பிடுகையில் அது போதுமானதல்ல.

## 4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக்காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| (அ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | சீஈபீயின் விநியோகப் பிரிவிலுள்ள மூலதன நடைபெறும் வேலைகளினை பூர்த்தி செய்வதிலுள்ள நீண்ட தாமதத்தினை அகற்றல் மற்றும் அளவைக்கு துரிதப்படுத்தல், சீஈபீயின் காணிகளின் பாதுகாப்பை உலகளாவிய ரீதியில் பரவலாக்குதல் |
| (ஆ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | கடன்பட்டோர் மற்றும் ஏனைய வருமதிகளை உரிய காலத்தில் அறவிடுதல், மொத்த வழங்கல் மீதான பிணை வைப்புக்களை உரிய காலத்தில் நாளதுவரையாக்குதல். |
| (இ) | மனித வளங்கள் முகாமைத்துவம் | மனித வளங்கள் முகாமைத்துவம் சீஈபீயின் குறிக்கோள்களை அடைவதற்கு முடிதல். |